**பிறப்பட்டி டெவலப்மென்ற் பிஎல்சீ மற்றும் அதன் துணைக் கம்பனி - 2016**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

பிறப்பட்டி டெவலப்மென்ற் பிஎல்சீயினதும் (''கம்பனி'') கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் (''தொகுதி'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

-----------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும், நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியினதும் மற்றும் தொகுதியினதும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி, கம்பனியினதும் தொகுதியினதும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

------------------------

### 2.1 அபிப்பிராயம்

-----------------

கம்பனி மற்றும் தொகுதியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

------------------------------------------------------------------------------------------------------------

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருவனவற்றை குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும், கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன.

- 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன.

### 2.2 தொகுதியின் நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைப்புக்கான அடிப்படையும்

----------------------------------------------------------------------------------------------

கம்பனியினதும் அதன் துணைக் கம்பனியினதும் நிதிக்கூற்றுக்களின் ஒன்றிணைப்பை தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்கியுள்ளன. அதாவது, கொலடெனியா ஹைட்ரோபவர் (பிறைவேற்) லிமிட்டட்.

கொலடெனியா ஹைட்ரோபவர் (பிறைவேற்) லிமிட்டட் ஆனது கம்பனியினது முழு உரித்தான துணைக்கம்பனியாக காணப்படுவதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதலீட்டு பெறுமதி ரூபா 242 மில்லியன் ஆக இருந்தது.

### 2.3 பங்குமூலதனமும் உரிமையாண்மையும்

---------------------------------------------------

கம்பனியானது ஒரு விலைகூறப்பட்ட கம்பனியாக காணப்படுவதுடன் 95.5 சதவீத பங்கு மூலதனத்தினுடனான இலங்கை வங்கியினது ஒரு துணைக்கம்பனியும் ஆகும்.

**2.4 சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கட்டளைச்சட்ட விதிமுறையின் பிரகாரம் (Prescription Ordinance), பொறுப்புக்களானது 6 வருடங்கள் கொண்ட சட்டரீதியான பிடித்துவைத்தல் காலப்பகுதிக்குள் கோரப்பட்டிருக்காவிடின், அது மீண்டும் எழுதப்படல் வேண்டும். ஆயினும், 6 வருடங்கள் கொண்ட சட்டரீதியான பிடித்துவைத்தல் காலப்பகுதியினை விஞ்சியிருந்த ரூபா 6,742,644 மீதியானது, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பங்குஇலாபத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனியினதும் தொகுதியினதும் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான முறையே ரூபா 471 மில்லியன் மற்றும் ரூபா 537 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில், முறையே ரூபா 560 மில்லியன் மற்றும் ரூபா 616 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை பதிவுசெய்திருந்தமையால், நிதி விளைவுகளில் முறையே ரூபா 79 மில்லியன் அல்லது 14.7 சதவீத மற்றும் ரூபா 89 மில்லியன் அல்லது 18.9 சதவீத முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது கம்பனியினதும் தொகுதியினதும் நிதிவிளைவுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்குப் பங்களித்த காரணங்களின் பொழிப்பினை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| | **தொகுதி** | | | **கம்பனி** | | |
|---|---|---|---|---|---|---|
| | **2016** | **2015** | **மாற்றம் சாதகமானது/ (பாதகமானது)** | **2016** | **2015** | **மாற்றம் சாதகமானது/ (பாதகமானது)** |
| | **ரூபா. மில்.** | **ரூபா. மில்.** | **சதவீதம்** | **ரூபா. மில்.** | **ரூபா. மில்.** | **சதவீதம்** |
| வாடகை வருமானம் | 619 | 527 | 17.45 | 619 | 527 | 17.45 |
| இலங்கை மின்சார சபைக்கான மின்நிலைய வாடகையிலிருந்தான வருமானம் | 76 | 97 | (21.64) | - | - | - |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 237 | 190 | 24.73 | 220 | 184 | 19.56 |
| தொழிற்பாட்டு செலவுகள் | 316 | 277 | (14.07) | 279 | 240 | (16.25) |
| **வருமான வரிக்கு முன்னரான இலாபம்** | **616** | **537** | **14.71** | **560** | **471** | **18.89** |

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) கம்பனியினுடைய மொத்தச்செலவீனங்களில் ரூபா 111.27 மில்லியன் தொகை அல்லது 40 சதவீதமானது மின்சாரம், காப்புறுதி, நீர், மாநகரசபை விதிப்பனவுகள் மற்றும் பராமரிப்புச்செலவுகளிற்காக ஏற்பட்ட நேர்ச்செலவுகளினை பிரதிபலிப்பதுடன் நேர்ச்செலவுகளில் 20 சதவீதமானது பாரமரிப்புச் செலவுகளிற்காக செலவு செய்யப்படுகின்றது.

ஆ) மீளாய்வு செய்யப்படும் ஆண்டின் இறுதியில் காணப்படும் மொத்தச்சொத்துக்களில் எழுபத்தியிரண்டு (72) சதவீதமானது கம்பனியினுடைய நிதிச்சொத்துக்களை பிரதிபலிக்கின்றது. 2016 திசெம்பர் 31 இல் கம்பனியானது ரூபா 1,694 மில்லியன் தொகையினை நிலையான சொத்துக்களில் முதலீடு செய்திருந்ததுடன் இது நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 555 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 205 சதவீத வளர்ச்சியாக இருந்தது.

இ) தாய்க்கம்பனியிடமிருந்தான வாடகை பெறுவனவின் அதிகரிப்பின் காரணமாக, 2016 திசெம்பர் 31 இல் வியாபார மற்றும் ஏனைய வருமதிகளானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 196 மில்லியன் அல்லது 983 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்திருந்தது.

ஈ) கம்பனியினுடைய வியாபார மற்றும் ஏனைய சென்மதிகளும் நானாவித கடன்கொடுத்தோர்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 19 மில்லியன் அல்லது 77 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

உ) 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களிற்கிணங்க, கம்பனியினுடைய தொழிற்பாடுகள் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,668 மில்லியன் பகிரப்படாத இலாபத்தினுடன் ஒப்பிடுகையில் ரூபா 897 மில்லியன் பகிரப்படாத இலாபத்தினை காட்டியிருந்தமையானது ரூபா 771 மில்லியன் வீழ்ச்சியை சுட்டிக்காட்டுகின்றது. சாதாரண பங்குகளுக்கான இடைக்கால மற்றும் இறுதி பங்கிலாபங்கள் பிரகடனப்படுத்தப்பட்டமையானது இந்த வீழ்ச்சிக்கான காரணமாக இருந்தது.

# 4. தொழிற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயற்பாட்டு மீளாய்வு

இலங்கை வங்கிக்கு கம்பனியால் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள இலங்கை வங்கியினுடைய தலைமை அலுவலக கட்டடத்தினை உரிமை செய்தல், பராமரித்தல், முகாமை செய்தல், அபிவிருத்தி செய்தல், பயன்பாடு மற்றும் பெறுமதியை நிலைத்து நிற்க செய்தல் என்பன கம்பனியினுடைய பிரதான செயற்பாடாகும். எவ்வாறாயினும், கம்பனியினுடைய மொத்தச்சொத்துகளில் 77 சதவீதத்திற்கு அதிகமானவை முதலீடுகளினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்தன.

கொலடெனியா ஹைட்ரோபவர் (பிறைவேற்) லிமிட்டட் ஆனது கம்பனியினது முழு உரித்தான துணைக்கம்பனியாக காணப்படுவதுடன் இது தனது வர்த்தக செயற்பாடுகளை 2012 ஏப்ரல் 25 இல் ஆரம்பித்திருந்தது. இத்துணைக்கம்பனியின் பிரதான நோக்கமானது 1200 கிலோவாற்ஸ் இயலளவு கொண்ட மின்நிலையத்தினூடாக மின்சாரத்தினை உருவாக்கி துணைக்கம்பனிக்கும் இலங்கை மின்சார நிலையத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கமைவாக தேசிய எல்லைக்குள் மின்சாரத்தினை விநியோகித்தல் ஆகும்.

## 4.2 முகாமைத்துவத்தின் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) தகவல் தொழில்நுட்ப தொழிற்பாடுகளிற்கான முறைசார் கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் முகாமைத்துவத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவோ, அனுமதிக்கப்பட்டிருக்கவோ இல்லை. மேலும், பயனாளர் கணக்கு முகாமைத்துவத்திற்கு முறையான ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன் எந்தவித முறையான நடவடிக்கையும் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஆ) சிபிஸ் (Sybiz), பராமரிப்பு முகாமைத்துவம், சம்பளப்பட்டியல்(Payroll), செயற்படு கோப்பகம்(Active Directory), மற்றும் டிஎம்எஸ் இருப்பு (DMS inventory) ஆகிய முறைமைகளிற்கான காலரீதியான பயனாளர்களுடைய உள்நுழைவு தொடர்பான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சலுகை வழங்கப்பட்ட உள்நுழைவு செயற்பாடுகளும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இ) குறித்த முறைமைகளில் கடவுச்சொல் கட்டுப்பாடுகள் எவையும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. பயனாளருக்கு தகவல் தொழில்நுட்ப நிர்வாகியால் கூறப்பட்ட ஆரம்ப கடவுச்சொல்லை மாற்றம் செய்வதற்கான எந்த தெரிவும் இருக்கவில்லை.

ஈ) நீக்கப்பட்ட வன்பொருள் உபகரணம் அகற்றப்படாது “me server room” இல் வைக்கப்பட்டிருந்தது. மேலும், வெப்பநிலை அவதானி, வெப்பம் கண்டறி கருவி, மற்றும் ஈரப்பதம் கண்டறி கருவி ஆகியன சேவர் அறையில் காணப்பட்டிருக்கவில்லை.

உ) காப்புக்களை(backups) சேமித்து வைப்பதற்கு நிறுவனத்திற்கு வெளியே பாதுகாப்பான இடம் எதுவும் இருக்கவில்லை என்பதுடன் தற்பொழுது காப்புக்கள் அதே அலுவலக கட்டடத்தில் சேமிக்கப்பட்டு வருவதனையும் மேலும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அத்துடன் மீட்பு பரிசோதனைக்காக (restoration testing) முறையான ஆவணப்படுத்தல் எதுவும் இருக்கவில்லை.

ஊ) அனர்த்த மீட்பு திட்டம் (Disaster Recovery plan) காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன், பிந்திய வடிவமானது 2014 ஆம் ஆண்டில் நாளதுவரையாக்கப்பட்டிருந்தது.

## 4.3 இருப்பு முகாமைத்துவம்

கம்பனியினுடைய இருப்பு துணைப்பேரேடு தாய்க்கம்பனிக்கு(இலங்கை வங்கி) உரித்தான ரூபா 3,581,759 பெறுமதியான ஒரு இருப்பினை உள்ளடக்குகின்றது. கம்பனியானது அதனுடைய களஞ்சிய அறையில் இந்த இருப்பினை இலங்கை வங்கியின் சார்பாக பராமரிக்கின்றது.

## 4.4 சொத்து முகாமைத்துவம்

2016 திசெம்பர் 31 இல் கம்பனியினது முழுமையாக பெறுமானத்தேய்விற்குள்ளான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியானது மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்களின் ரூபா 78,902,846 அல்லது 28.7 சதவீதம் ஆகும்.

இதன்பொருட்டு பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) ரூபா 70,455,174 பெறுமதியான சொத்துக்கள் அல்லது மேற்படி சொத்துக்களில் 0.89 சதவீதமானது, மிக நீண்டகாலத்திற்கு முன்பு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது என்பதுடன் கம்பனியால் அவற்றினது பௌதீக ரீதியிலான இருப்பினை உறுதி செய்ய இயலாதிருந்தது.

ஆ) மேற்படி சொத்துக்களில் ரூபா 8,447,672 பெறுமதியான மிகுதி சொத்துக்கள் அவற்றினது எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்பாட்டு காலம் என்பவற்றினை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது கம்பனியால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.1 ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, கம்பனியானது கூட்டிணைந்த திட்டத்தினை தயாரித்திருக்கவில்லை. ஆயினும் கம்பனியானது மீளாய்வாண்டிற்கான வணிகத்திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்திருந்தது.